

தூரிகை மகளிர் மேம்பாட்டு மையம் ஒருங்கிணைப்பில், அருணை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை சார்பில் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில் வளைகாப்பு விழா நடைபெற்றது, இவ்விழாவில் அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு, 600க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசைப் பொருட்கள், புத்தாடைகள், பழவகைகள் மற்றும் அறுசுவை உணவுகள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

### எம்,பி,க்கள் வாரத்தில் 4 நாட்கள் தொகுதியில் தங்கி மக்களைச் சந்திக்க முதல்வர் அறிவுறுத்தல்!

# அனைத்துக் கட்சிகளும் இம்முறையைப் பின்பற்றினால் தமிழக மக்களின் குறைகள் தீரும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, அக். 15 - "தமிழ்நாட்டு எம்.பி.க்கள் வாரத்தில் 4 நாட்கள் தொகுதியில் தங்கி மக்களைச் சந்திக்க வேண்டும் என்ற முதல்வரின் அறிவுறுத்தலை அனைத்துக் கட்சிகளும் பின்பற்றினால் தமிழக மக்களின் குறைகள் தீரும்" என்று 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து 14.10.2025 தேதிய 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

2,500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சீன தத்துவ மேதை லாவோ சூ, உதிர்த்த எண்ணற்ற தத்துவங்கள் இன்றும் எல்லா நாடுகளிலும் பல மேற்கோள்களுக்கு சுட்டிக் காட்டப்படுகின்றன.

மறைந்த அண்ணா அவரது எழுத்துக்கள் மீது அதிக ஈர்ப்பு கொண்டவர். அவர் சொன்ன ஒரு தத்துவம் அன்று மட்டுமல்ல, இன்றும், என்றும் அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் மட்டுமல்லாமல் பொது சேவையில் உள்ள அனைவரும் பின்பற்றக் கூடிய வகையில் பாடங்களை கற்றுக்கொடுப்பதாக இருக்கிறது. அன்று அவர் சொன்னது, "மக்களிடம் செல், அவர்களுடன் வாழ். அவர்களிடம் இருந்து கற்றுக் கொள். அவர்களை நேசி. அவர்கள் அறிந்தவற்றில் இருந்து தொடங்கு. அவர்களிடம் உள்ளவற்றைக் கொண்டு கட்டமை".





இந்த வாசகங்களைத் தான் அண்ணா, தி.மு.க.வில் உள்ள தன் தம்பிகள் மக்கள் பணியில் சிறக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அடிக்கடி குறிப்பிடுவார். அதனை இப்போது முதல் - அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும் கையில் எடுத்துள்ளார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களோடு இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் சில திட்டங்களை வகுத்துக் கொடுத்துள்ளார். ஏற்கனவே அமைச்சர்கள் வேலை நாட்களில் மட்டும் தலைமைச்செயலகத்தில் இருந்து தங்கள் பணிகளை கவனித்துவிட்டு வார இறுதி நாட்களில் தங்கள் தொகுதிக்கும், மாவட்டங்களுக்கும் சென்று மக்கள் பணி ஆற்றவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவுக்கு பிறகு அமைச்சர்களை வார இறுதியில் சென்னையில் பார்க்கமுடியவில்லை. தங்கள் மாவட்டங்களிலேயே சுற்றுப்பயணம் சென்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

அடுத்து முதலமைச்சருடைய பார்வை இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது விழுந்துவிட்டது. சமீபத்தில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டி பல ஆலோசனைகளை வழங்கினார். அப்போது அவர், நாடாளுமன்றம் நடைபெறும் நாட்களைத் தவிர்த்து குறைந்தது வாரத்தில் 4 நாட்கள் தங்கள் தொகுதியில் தங்கி மக்களைச் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான பணிகளை செய்யவேண்டும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் தொகுதியில் ஆற்றிய மக்கள் பணிகள், நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டு மக்களின் நலனை காத்திடும் வகையில் எடுத்துரைத்த கருத்துக்கள் ஆகியவை பற்றிய அறிக்கையை 15 நாட்களுக்கு ஒருமுறை தனக்கு அளித்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

ஆக தமிழ்நாட்டில் தி.மு.க. எம்.பி.க்களை தொகுதியில் உள்ள மக்கள் இனி வாரத்துக்கு 4 நாட்கள் சந்தித்து தங்கள் குறைகளை சொல்லமுடியும். இனி தொகுதி மக்கள் தங்களுடைய எம்.பி.க்களை எந்த கஷ்டமும் இன்றி எளிதாக சந்திக்கலாம். நாடாளுமன்றத்தில் தமிழக மக்கள் நலன் குறித்து பேசிய விவரங்களையும், முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டு இருப்பதால் அவருக்கு அனுப்பும் அறிக்கையில் சொல்லவேண்டும் என்பதற்காகவும், இனி நாடாளுமன்றத்தில் நிச்சயம் கேள்விகளை கேட்க வேண்டும். விவாதங்களில் பங்கு கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்துக்கு எம்.பி.க்கள் ஆளாகியுள்ளனர். இதேமுறையை அனைத்துக் கட்சிகளும் பின்பற்றினால் தமிழக மக்களின் குறைகளெல்லாம் நிறைவாகும். இதேபோல அனைத்து தொகுதிகளிலும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக இப்போது ஒன்றிய அரசாங்கம் ஆண்டுக்கு ரூ.5 கோடி வழங்குவதை ரூ.10 கோடியாக உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்தியுள்ளார். தமிழக அரசு எம்.எல்.ஏ.க்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூ.3 கோடி வழங்கும் நிலையில் 6 சட்டமன்றத் தொகுதிகளைக்கொண்ட ஒரு எம்.பி. தொகுதிக்கு ரூ.10 கோடி வழங்கவேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதுதான்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிட ப்பட்டுள்ளது.



பொதுக்குழு உறுப்பினர் மு. பிரபாகரன் ஏற்பாட்டில் புதுவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நல உதவிகளை புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், ஏர்வாய்ப்பட்டினம் பெரிய ஏரியில் பனை விதை நடும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கி வைத்தனர். நிகழ்வில் அன்புமணிமாறன், சுமதி சௌரிராஜன், அருண் பிரசாத், ஜோதி பன்னீர், மணி, அன்பழகன், செல்வம் மற்றும் வனத்துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பொதுக்குழு உறுப்பினர் மு. பிரபாகரன் ஏற்பாட்டில்

# புதுவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் - நல உதவிகள்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வழங்கினார்!

புதுச்சேரி, அக். 15 - தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, புதுச்சேரி பொதுக்குழு உறுப்பினர் மு. பிரபாகரன் ஏற்பாட்டில் நடந்த நிகழ்ச்சியில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு 5 ஆயிரம் குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

புதுச்சேரி மாநிலம் முத்தியால்பேட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில், தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி முத்தி யால்பேட்டையில் உள்ள தனியார் திருமண நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்தது.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் மு.பிரபாகரன் தலைமை தாங்கினார். மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் உத்தமன் முன்னிலை வகித்தார்.

இதில் மாநில அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு, ஏழை, எளிய குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரம் பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கினார். தொடர்ந்து தொகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்தும் வகையில் ஷாமியானா, தள்ளுவண்டிகள், நாற்களிகளையும் வழங்கி, அதற்கான இலவச எண்ணையும் அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல். சம்பத், துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் பாராளுமன்ற செயலர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ. வேலவன், வீ. சண்முகம், ஜெ. வேலன், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், கே.பி. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாக ரன், எஸ். எஸ். செந்தில்குமார், வே. மாறன், நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி.சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல், கோ. தியாக ராஜன், ர.சிவக் குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ.சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழிய பாண்டியன், கலிய. கார்த்திகேயன், செ.ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், சி. சத்தியவேலு உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

### தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர்

# பேராசிரியர் ஜெயரஞ்சன் மாமனார் என்.நாகராஜன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக. 15 - தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சனின் மாமனார் என்.நாகராஜன் அவர்களின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்களது மாமனார் என்.நாகராஜன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் ஜெயரஞ்சன் மற்றும் அவரது துணைவியார் திருமதி ராணி ஜெயரஞ்சன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரு.செயல்மணி
### அக்டோபர் 15 (2014)



1963ஆம் ஆண்டு முதல் தலைவர் கலைஞர் அவர்களிடம் அணுக்கத் தொண்டராகவும் – உதவியாளராகவும் பணியாற்றி வந்தவர்.

"1989 தேர்தல் நேரத்தில் செயல்மணியின் தாயார் மறைவு செய்தி அறிந்து, அவரது மறைவிற்குக்கூட செல்லாமல் சென்னையிலே இருந்து, தேர்தல் முடிந்து, வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பின்தான் தாயாரின் துக்கம் விசாரிப்பதற்காக சொந்த ஊருக்கு சென்றான் என்றால், என்னைவிட தியாகத்திலே அவன் சிறந்தவன் என்று சொல்வதிலே நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்" என்றும்; என்னுடைய குடும்பத்திலே ஒருவன், என் பிள்ளைகளிலே ஒருவன் என்கிற முறையிலே வாழ்ந்து வளர்ந்தவன் செயல்மணி" எனவும்;

இரங்கல் செய்தியில் "இவனை சேவகனாகப் பெறவே என்ன தவம் செய்தேன் ?" என்று தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நிலக்கோட்டை ஆ. முனியாண்டி
### அக்டோபர் 15 (1992)



தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நிலக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள தனது சொந்த ஊரான விளாம்பட்டியில் கழகக் கிளையை துவக்கி, அப்பகுதி முழுவதும் கழகத்தை வளர்த்தவர்.

திண்டுக்கல் மாவட்ட துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

1962–ல் நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்திலும், 1963–ல் மதுரையில் இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டு 2 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தவர்.

நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**